

செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சிங்கபெருமாள் கோயில் ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பயனாளிகளிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், ஒன்றியச் செயலாளர்கள் ஆப்பூர் சந்தானம், கே.பி.ராஜன், காட்டாங்குளத்தூர் ஒன்றிய குழு தலைவர் உதயா கருணாகரன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விலை வீழ்ச்சியால் மாம்பழ விவசாயிகள் கடும் பாதிப்பு

# ஒன்றிய அரசு உதவிக் கரம் நீட்டுமா?

## மக்களவையில் - டி.ஆர். பாலு கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 23-

நடப்பு ஆண்டு மாம்பழ விளைச்சல் அதிகமாக உள்ள நிலையில் விலையில் கடும் வீழ்ச்சியும் விற்பனையும் முழுமையாக இல்லாததால் உரிய லாபம் கிடைக்காமல் மாம்பழ விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் கிடைத்த விலைக்கு விற்கும் கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு மாம்பழ விவசாயிகள் நலன் காக்க ஒன்றிய, மாநில அரசுகள் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? இது போன்ற இன்னல்களை எதிர்கொள்ள மாம்பழ ஏற்றுமதி மை ஊக்குவிக்கவும் இன்ன பிற ஆதரவுகளை அளிக்கவும் மாங்கனி வாரியம் அமைக்கவும் அரசு முன்வருமா? என்று மக்களவையில் திமுக மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய இணை அமைச்சர் ராம்நாத் தாக்கூர் நாடாளுமன்ற மக்களவையில் அளித்த எழுத்துபூர்வ பதிலில் நடப்பு மாம்பழ பருவத்தில் மாம்பழங்கள் விளைச்சல் சென்ற ஆண்டை விட 5 லட்சம் டன் அதிமாக, 228.37 லட்சம் டன் அளவில் உள்ளது. தென் மாநிலங்களில் மாம்பழ விளைச்சல் இந்த ஆண்டு அதிக மானதால் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது போன்ற சூழல்களில் மாம்பழ உற்பத்தியாளர்களுக்கு நிவாரணம் அளித்திட ஒன்றிய அரசின் “சந்தை இடையீடு திட்டம்” செயல் படுத்தப் படுகிறது . இத்திட்டத்தின் கீழ் விருப்பப் படும் மாநில அரசு உபரியாக உள்ள மாம்பழத்தை கொள்முதல் செய்து விவசாயி களின் இழப்பை சரி செய்யலாம். இதனால் ஏற்படும் நஷ்டத்தில் 50 விழுக்காடு வரை மாநில அரசுகள் ஏற்க முன்வர வேண்டும்.

மாம்பழ விளைச்சலை அதிகரிக்கவும் அதற்கு தக்க உத்திகள் தொடர்பான அறிவுரைகளையும் மாம்பழ விவசாயிகளுக்கு இந்திய வேளாண் ஆராய்ச்சி மையம் வழங்கி வருகிறது. மேலும், ஏற்றுமதி தொடர்பான உட்கட்டமைப்பு, பதப்படுத்தல் போன்றவைக்கு ஒன்றிய அரசின் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் மாம்பழ விவசாயிகளுக்கு ஏற்றுமதிக்கு தேவையான உரிய உதவிகளை அளிக்கின்றன.

இவ்வாறு ஒன்றிய வேளாண் இணை அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார். மாங்கனி வாரியம் அமைப்பது குறித்து எந்த தகவலையும் அமைச்சர் தனது பதிலில் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

### திராவிட மாடல் ‘2.o’ ஆட்சி மீண்டும் அமையப் போவது உறுதி!

# எதிரிகளின் பயமே நமது வெற்றி!

## ‘ஓரணியில் தமிழ்நாடு’ கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!



சென்னை, ஜூலை 23-

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காத்திடும் பொருட்டு ஓரணியில் தமிழ்நாடு பரப்புரையை முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் ஜூலை 1 ஆம் தேதி தொடங்கி வைத்தார். அவர் தொடங்கி வைத்த நாள் முதல் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வஞ்சக சூழ்ச்சியையும், அடிமை அ.தி.மு.க.வின் துரோகங்களையும் கண்டு வெறுத்துப் போய் இருக்கும் தமிழ்நாட்டு மக்கள் முதல்வர் பின்னால் ஓரணியில் தமிழ்நாடு என அணி அணியாய் அணிவகுத்து நிற்கத்தொடங்கினர். அதோடு எல்லார்க்கும் எல்லாம் என்ற உயரிய நோக்கோடு திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் சென்று சேராத குடும்பங்களே கிடையாது என்ற அளவிற்கு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு குடும்பத்தையும் பார்த்து பார்த்துக் கவனித்து வருவதால் தமிழ்நாட்டு மக்கள் குடும்பம் குடும்பமாக கழகத்தில் இணைந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களும், அ.தி.மு.க. வினருமே கூட மாண்புமிகு முதலமைச்சர் பின்னால் அணிதிரள்வதைக் கண்டு தாங்க முடியாமல் அரண்டுபோய் அவதூறுகளைப் பரப்பி மக்களைக் குழப்ப பார்த்து அதில் தோற்றுப்போனதால் , நீதிமன்றத்திற்கு சென்று ஓரணியில் தமிழ்நாடு பரப்புரையை எப்படியாவது தடுக்க முடியாதா என தவம் கிடந்தார் பழனிசாமி. நீதிமன்றத்தை நாடி தடைவாங்க முயன்ற அ.தி.மு.க.விற்கு மாண்பமை நீதிமன்றம் ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கைக்கு தடைவிதிக்க முடியாது எனக் கூறி பழனிசாமி முகத்தில் கரியைப் பூசிவிட்டது. மேலும் OTP மட்டும் கேட்காமல் வழக்கம் போல உறுப்பினர் சேர்க்கையை மேற்கொள்ள அனுமதித்துள்ளது நீதிமன்றம். இப்படி கழக உறுப்பினர் சேர்க்கையை எப்படியாவது தடுக்க வேண்டும் என்ற பழனிசாமியின் பதட்டமே ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை எந்த அளவிற்கு மக்களிடம் சென்றுள்ளது என்பதை வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

கழக உறுப்பினர் சேர்க்கையைத் தடுக்க நினைத்த அதிமுக, பா.ஜ.க.வின் சதிச் செயலை நீதிமன்றமே முறியடித்த பின்னும், “சீப்பை ஒளித்து வைத்துவிட்டு கல்யாணத்தை நிறுத்தி விட்டோம்” என்ற வகையில் OTP பெறுவதை தடுத்து விட்டோம் என கூப்பாடு போடுகிறது அடிமைகள் கூட்டம். வேடிக்கை.!

திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சிறப்பான ஆட்சியை முன்வைத்து தன்னெழுச்சியாக பொது மக்கள் தங்களை கழக உறுப்பினராக இணைத்து வருகின்றனர். அதில் OTP பெறுவது என்பது உறுதிப்படுத்தலுக்கான ஒரு சிறு நடைமுறை மட்டுமே. எனினும் நீதிமன்ற வழிகாட்டலை மதித்து அந்த நடைமுறைக்கு மாற்றாக கீழ்க்காணும் நடைமுறையை கடைபிடித்து உறுப்பினர் சேர்க்கையை மேற்கொள்ளுமாறு கழக உடன் பிறப்புகளுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**புதிய வழிமுறைகள்:**

மக்களுடன் ஸ்டாலின் App ஐ அனைவரும் Update செய்து கொள்ளுங்கள்.

1) OTP கேட்கும் முறை தற்போது இல்லை.

2) அலைபேசி எண் கட்டாயம்.

3) தற்போதைக்கு, ஒரு குடும்பத்திற்கு ஒரு போன் நம்பரில் 1:4 என்ற அடிப்படையில் உறுப்பினர்களைச் சேர்க்கலாம்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு அலைபேசி எண் என்ற முறை வந்துள்ளது. ஆனால் வாய்ப்பு இருக்கும் இடங்களில் கிடைக்கின்ற அனைத்து அலைபேசி எண்களையும் பெற்றுக் கொள்ளவும்.

அலைபேசி எண் தவறாகவோ அல்லது அந்தக் குடும்பத்தில் இல்லாத நபரின் எண்ணாகவோ இருந்தால், உறுப்பினர் சேர்க்கை மேற்கொண்ட அனைத்துத் தரவுகளும் நீக்கப்பட்டு இப்பணியை மீண்டும் தொடக்கத்தில் இருந்து தொடங்கிட வேண்டும் என்பதால் பெறப்படும் அலைபேசி எண்ணின் உண்மைத் தன்மையை உறுதி செய்து கொள்வது அவசியம்.

அலைபேசி எண்ணைப் பதிவிட்டு சமர்ப்பித்தால் உறுப்பினர் சேர்க்கை முடிவடையும். அனைத்து வாக்காளர்களையும் சந்தித்து முழுமையாக கணக்கெடுப்புகளை முடிக்க வேண்டும்.

எதிரிகளின் பயமே நமது வெற்றி. 2026 லும் கழகத் தலைவர் அவர்களது தலைமையில் திராவிட மாடல் 2.o ஆட்சி அமைவது உறுதி.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### என்னைப் போல் மேலும் பலர் விலகுவர்!

# எடப்பாடியினால் அ.தி.மு.க. சரிவைச் சந்திக்கும் !

## கழகத்தில் இணைந்த அன்வர் ராஜா பேட்டி!



**சென்னை, ஜூலை 23-**

**“அ.தி.மு.க.விலிருந்து என்னைப் போல் மேலும் பலர் கட்சியிலிருந்து விலகுவர்” என்றும் “எடப்பாடியினால் அ.தி.மு.க. சரிவைச் சந்திக்கும்” என்றும் கழகத்தில் இணைந்த அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா கூறியுள்ளார்.**

அண்ணா அறிவாலயத்தில் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நான் என்னை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டு இருக்கிறேன். இதற்கு பல காரணங்கள் உள்ளன. கருத்தியல் ரீதியாக தி.மு.க.வுக்கும், எனக்கும் எப்போதுமே தொடர்புகள் உண்டு.

இப்போது பாரதீய ஜனதா கட்சியின் கைகளில் அ.தி.மு.க. சிக்கி உள்ளது. பா.ஜ.க. தலைவர்கள் தொடர்ந்து தமிழகத்தில் கூட்டணி ஆட்சி அமைப்போம் என்று பேசி வருகிறார்கள். மத்திய மந்திரி அமித்ஷா 3 தடவை இது தொடர்பாக பேட்டியளித்தார்.

ஆனால் அவர் ஒரு தடவை கூட தமிழகத்தில் 2026ம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்றதும் எடப்பாடி பழனிசாமி முதலமைச்சர் ஆவார் என்று சொன்னதே இல்லை. எடப்பாடி பழனிசாமி கடந்த 10 நாட்களாக சுற்றுப் பயணம் செய்து கொண்டு இருக்கிறார். அமித்ஷாவின் பேட்டிக்கு அவரால் வெளிப்படையாக நான்தான் முதலமைச்சர் என்று சொல்ல இயலவில்லை.

அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியால் அ.தி.மு.க.வுக்கு தான் மிகப் பெரிய அழிவு ஏற்படும். பா.ஜ.க. தலைவர்கள் திட்டமிட்டு அ.தி.மு.க.வை அழித்து விடுவார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டணி வைத்துக் கொள்ளும் கட்சிகளை அழிப்பதை பாரதீய ஜனதா வாடிக்கையாக வைத்து உள்ளது.

பாரதீய ஜனதாவின் இந்த அரசியல் இன்னமும் நிற்கவில்லை. தமிழகத்திலும் தொடர்கிறது. அவர்களால் அ.தி.மு.க. அழியும் நிலைக்குச் செல்கிறது. இதற்கு மற்ற மாநிலங்களில் பா.ஜ.க. நடந்து கொண்ட விதத்தையே உதாரணமாக சொல்ல முடியும்.

ஜெயலலிதா இருந்த போதும் பாரதீய ஜனதா ‘கட்சியுடன் அ.தி.மு.க. கூட்டணி அமைத்து இருந்தது. ஆனால் அப்போது அ.தி.மு.க.வை பார்த்து பா.ஜ.க. வினர் பயப்பட்டனர். மத்தியில் பா.ஜ.க. ஆட்சியை கலைத்து விட்டு ஜெயலலிதா கம்பீரமாக வந்தார்.

ஆனால் இப்போது நிலைமை தலைகீழாக உள்ளது. பா.ஜ.க. தலைவர்களை பார்த்து அ.தி.மு.க.வினர் பயப்படுகிறார்கள். அ.தி.மு.க.வின் அழிவுக்கு இதுதான் தொடக்கமாக அமைந்துள்ளது. அ.தி.மு.க.வில் என்னை போலவே இன்னும் பலர் அதிருப்தியுடன் இருக்கிறார்கள். அவர்களது கருத்துக்கள் எடுபடவில்லை. இதனால் 2026ம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெறாது.

அழிவை நோக்கிதான் செல்லும். எடப்பாடி பழனிசாமி வீட்டில் சமீபத்தில் முன்னாள் அமைச்சர்கள் அவரை சந்தித்து அ.தி.மு.க.வை மீண்டும் வலிமைப்படுத்துவதற்கு சில யோசனைகளை தெரிவித்தனர். ஆனால் எடப்பாடி பழனிசாமி அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

அவர் எதையுமே ஏற்றுக் கொள்ள மாட்டார். இதனால் என்னை போல மேலும் பலர் விலகுவார்கள். இதனால் அ.தி.மு.க. எதிர்காலம் இல்லாமல் சரிவை சந்திக்கும்.

இவ்வாறு அன்வர்ராஜா கூறினார்.

# மு.க.முத்து மறைவிற்கு - குவைத் நாட்டில் இரங்கல் கூட்டம்!

சென்னை.ஜூலை23.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மகன் மு.க.முத்து மறைவிற்கு குவைத் நாட்டில் கழகத்தினர் இரங்கல் கூட்டம் நடத்தி அஞ்சலி செலுத்தினர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மகன் மு.க.முத்து அவர்கள் மறைவிற்கு தமிழ்நாடு முழுவதும் அவரது திருஉருவப்படத்திற்கு கழகத்தினரும் திரைத்துறையினர் மற்றும் பொதுமக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர். இதன் தொடர்ச்சியாக குவைத் நாட்டில் குவைத் நாட்டின் அயலக அணியினர் இணைந்து இரங்கல் கூட்டம் நடத்தினர் .

முத்துவேலர் அஞ்சுகம் அம்மாள், மகன் வழி மூத்த பேரனும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர்பத்மாவதி அம்மாள் தம்பதியரின் மூத்த மகனும் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிடநாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அண்ணனுமான மு.க. முத்து அவர்கள் மறைவையொட்டி குவைத் நாட்டின் அயலக அணி சார்பாக இரங்கல் கூட்டம் நடைபெற்றது

குவைத் நாட்டின் அயலக அணி இணைச்செயலாளர் காட்டூர் சொ.ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில், அணி செயலாளர் புதுக்கோட்டை மு.பஷீர் அகமது , இணை செயலாளர் வேலம்புதுக்குடி மு.ஜியாவு தீன் , தொழிலாளர் அணி செயலாளர் போரூர் ராயல் ஜி.பிரகாஷ் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

மேலும் தளபதி பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் பட்டுக்கோட்டை சரவணன், அறந்தை அறக்கட்டளை நிறுவனர் முஹம்மது யூனுஸ் , விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள், தமிழ்நாடு முஸ்லிம் கலாச்சார பேரவையின் முன்னாள் தலைவர் சத்திரமணை அசன் முகமது, உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் அப்துல் மஜீத், புகைப்படக் கலைஞர் பக்ருதீன், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக நிர்வாகி அப்துல் லத்தீப், போன்ற கூட்டணி கட்சி நிர்வாகி களும் பெரும்திரளாக கலந்து கொண்டு ,தன் குரலாலும் நடிப்பாலும் மு.க.முத்து அவர்கள் காத்த திராவிட சுடர் என்றும் ஒளி வீசும் என இரங்கல் தெரிவித்து அஞ்சலி செலுத்தினர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மகன் மு.க.முத்து மறைவிற்கு குவைத் நாட்டில் அயலக அணியினரின் இரங்கல் கூட்டத்தில் அயலக அணி இணைச்செயலாளர் காட்டூர் சொ.ஆறுமுகம் தலைமையில் , அணி செயலாளர் புதுக்கோட்டை மு.பஷீர் அகமது , இணை செயலாளர் வேலம்புதுக்குடி மு.ஜியாவுதீன் , தொழிலாளர் அணி செயலாளர் போரூர் ராயல் ஜி.பிரகாஷ் ,தளபதி பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் பட்டுக்கோட்டை சரவணன், அறந்தை அறக்கட்டளை நிறுவனர் முஹம்மது யூனுஸ் , விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள், தமிழ்நாடு முஸ்லிம் கலாச்சார பேரவையின் முன்னாள் தலைவர் சத்திரமணை அசன் முகமது, உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் அப்துல் மஜீத், புகைப்படக் கலைஞர் பக்ருதீன், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக நிர்வாகி அப்துல் லத்தீப் உள்ளிட்டோர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

### புத்த, சமண, சீக்கிய மதத்தினர்

# புனிதப் பயணம் மேற்கொள்ள விண்ணப்பிக்கலாம்!

## சிறுபான்மையினர் நல இயக்ககம் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 23-

தமிழ்நாட்டைச் சேர்ந்த 50 புத்த மதத்தினர். 50 சமண மதத்தினர் மற்றும் 20 சீக்கிய மதத்தினர் இந்தியாவில் உள்ள அவரவர் மதங்களுக்கான புனித தலங்களுக்கு புனித பயணம் மேற்கொண்டவர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.10,000/ வீதம் 120 நபர்களுக்கு ரூபாய் 12 இலட்சம் நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் பயணம் மேற்கொண்டு பயன்பெற விரும்பும் புத்த, சமண மற்றும் சீக்கிய மதத்தினரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

புனித தலங்களின் விவரம்:

புத்த மதம் - 1. பீகாரில் உள்ள புத்த கயா, 2. உத்திர பிரதேசத்தில் உள்ள குசிநகர். 3. வாரணாசியில் உள்ள சாரநாத் கோவில், 4. பீகாரில் உள்ள ராஜ்கிர் வைஷாலி, 5. நேபாளத்தில் உள்ள லும்பினி போன்ற இடங்கள்.

சமண மதம் - 1. இராஜஸ்தானில் உள்ள தில்வாரா கோவில், ரணக்பூர் சமண கோவில், ஜெய்சால்மர் சமண கோவில், 2. ஜார்கண்டில் உள்ள சிக்கர்ஜி 3. குஜராத்தில் உள்ள பாலிடனா, 4. பீகாரில் உள்ள பவபுரி சமண கோவில் போன்ற இடங்கள். 5. கர்நாடகாவில் சரவணபெலகோலா.

சீக்கிய மதம் - 1. பஞ்சாப்பில் உள்ள அமிர்தசரஸ், தக்ட் ஸ்ரீகேசகர் சாகிப், தக்ட் ஸ்ரீடாம்டமா சாகிப். 2 பீகாரில் உள்ள தக்ட் ஸ்ரீ ஹர்மந்திர் சாகிப் (குரு கோவிந்த் சிங்), தக்ட் ஸ்ரீ ஹசூர் சாகிப் (மஹாராஷ்டிரா) போன்ற இடங்கள், 3. பாகிஸ்தானிலுள்ள குருத்வாரா ஸ்ரீ நான்காணா சாகிப், குருத்வாரா ஸ்ரீ சச்சா சௌதா, மண்டி சுகர்கானா, குருத்வாரா ஸ்ரீ பஞ்ச சாகிப், ஹசன் அப்தல், குருத்வாரா ஸ்ரீ தெஹ்ரா சாகிப்

இத்திட்டத்தின் கீழ் 01.07.2025க்கு பிறகு புனித பயணம் மேற்கொள்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான விண்ணப்ப படிவங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறு பான்மையினர் நல அலுவலகம் / சிறுபான்மையினர் நல அலுவலகங்களிலிருந்து கட்டணமின்றி பெறலாம். மேலும் www.bcmbcmw.tn.gov.in என்ற இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை உரிய ஆவணங்களுடன் அனுப்ப வேண்டிய முகவரி ஆணையர், சிறுபான்மையினர் நலத் துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை600 005.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய கடைசி தேதி: 30.11.2025.

இவ்வாறு சிறுபான்மையினர் நல இயக்ககம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மார்பளவு வெண்கலச் சிலை, கலைஞர் நூலகம், புதிய 72 அடி கழக கொடி ஏற்றுதல் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்க இன்று புதன்கிழமை மாலை 4 மணியளவில் வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் விழா மேடை இறுதிக்கட்ட பணிகளை சிறுபான்மை நலன் மற்றும்வெளிநாடு வாழ தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் ஆய்வு மேற்கொண்டு பார்வையிட்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் உள்பட மாநில மாவட்டநிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பேரூர் கழக கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்